# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,

**ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகம்,**

**உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்**

NOTIFICATION NO: PLV/02/2026

## காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு

## (NOTIFICATION FOR SELECTION FOR EMPANELMENT OF PARA LEGAL VOLUNTEERS IN POLICE STATIONS FOR MISSING CHILDREN AND OTHER OFFENSES AGAINST CHILDREN)

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan Vs Union of India and Others என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவின் படியும், தமிழ்நாடு அரசின் G.O.(Ms) No. 130 dated 12.03.2026 உத்தரவின் படியும், நீலகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு, காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers) தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.

**தகுதிகள்:**

- குறைந்தபட்சம் பன்னிரெண்டாம் வகுப்பு தகுதி பெற்றிருக்க வேண்டும். பட்டதாரிகளுக்கு குறிப்பாக சமூகப்பணி, உளவியல் சார்ந்த பாடப்பிரிவுகளில் தகுதி பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வயது 25 முதல் 65 வரை இருக்கவேண்டும்.
- நீலகிரி மாவட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும்.

**மதிப்பூதியம்:**

சட்டத் தன்னார்வலர் ஒருவருக்கு, ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1000/– வீதம் மதிப்பூதியம் பெறலாம். எனினும், ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5000/– என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

**பணிக்காலம்:**

இப்பணி சட்டத் தன்னார்வலர்களுக்கான சேவை மட்டுமே. இது நிரந்தர பணிக்கானது அல்ல. முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும். ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்கு

பட்டியலிடப்படுவார்கள். அவர்களின், செயல்பாட்டின் அடிப்படையில், இந்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

**பணியின் தன்மை:**

- காணாமல் போன குழந்தை தொடர்பான வழக்கு அல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளில், குழந்தைகளின் பெற்றோர் மற்றும் காவல்துறை விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களை பெற்றோரிடமிருந்து பெறுதல்
- காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்

**தேர்வு:**

நேர்க்காணல் மூலம் தகுதியான நபர்கள் இந்த ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்க்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதாவர்களின் விபரம் மற்றும் நேர்க்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விபரமும் **https://nilgiris.dcourts.gov.in/** என்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

எனவே, மேற்கண்ட பணிக்கு சட்ட தன்னார்வத் தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை **https://nilgiris.dcourts.gov.in/** என்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 25.09.2026 மாலை 5.30-க்குள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கடைசித் தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்

## சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

- மேற்படி பணிக்கு தகுந்த மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.
- மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலராக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது.
- மேற்கண்ட பணிக்கு சட்ட தன்னார்வத் தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை **https://nilgiris.dcourts.gov.in/** என்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்
- பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 25.09.2026 மாலை 5.30–க்குள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- மேற்படி கடைசித் தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: மாண்புமிகு தலைவர் மற்றும் மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, உதகமண்டலம் –643005
- கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
    - பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று
    - வகுப்பு சான்று
    - கல்வித்தகுதிக்கான சான்றுகள்
    - நிரந்தர முகவரிக்கான சான்று
    - இதர தகுதிச்சான்றுகள், ஏதேனும் இருப்பின்
    - அனுபவ சான்றிதழ்கள், ஏதேனும் இருப்பின்